# பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை

# ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

**187,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**
**187,ආඩියපාදම්පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.**
**187,Adiyapatham Road, Thirunelvely, Jaffna.**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


எனது இல : NP/09/FRM/CIR/2014

திகதி : 03.03.2014

மாகாண நிதிச் சுற்றுநிருப இல: PF/05/2014

மாகாண செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>அரச உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் பட்டியல்களைத் தீர்வு செய்தல்</u>

மேற்படி விடயம் தொடர்பாக நிதி திட்டமிடல் அமைச்சின் 446ம் இலக்க 2010/09/01ம் திகதிய அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கமைவாக வெளியிடப்பட்ட PT/06/2012ம் இலக்க 2012/04/25ம் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபம் தொடர்பாக பின்வரும் விடயங்களில் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தப்பட்ட கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

- வெளிநாட்டு அழைப்புக்கள் மேற்கொள்வதற்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களது வெளிநாட்டு அழைப்புக்களிற்குரிய கொடுப்பனவுகள் மாதாந்த ஒருங்கிணைந்த தொடர்பாடல் செலவின எல்லைக்குள் மேற்கொள்ளப்படலாகாது. இவ்வாறான கொடுப்பனவுகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவை தொடர்பில் அறவீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- அனுமதிக்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்களிற்குரிய தொலைபேசிக் கொடுப்பனவானது உத்தியோகத்தர்களிற்கு அனுமதிக்கப்பட்ட ஒருங்கிணைந்த தொடர்பாடல் செலவின எல்லைக்குள் இருப்பதை உறுதிசெய்தலும், செலவின எல்லையை மீறியிருப்பின் அவற்றை மேற்படி சுற்றுநிருபத்திற்கமைவாக அறவீடு செய்யப்படுதலும் வேண்டும்.

- மேற்படி விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது பிரதி பிரதம செயலாளர் - நிதி அலுவலகத்தால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு தங்களிற்கு அனுப்பப்படுகின்ற குழுமத் தொலைபேசி பட்டியல்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்

பிரதிகள்:- 1. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
2. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா }